அளிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்போது தமிழகத்தில் இருக்கின்ற மத்திய சிறைச்சாலைகள், புதுக்கோட்டையில் இருக்கின்ற பார்ஸ்டல் பள்ளி, 3 பெண்களுக்கான தனி சிறைச்சாலைகளிலே, தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகம்மூலம் மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியுடன் இணைந்து சிறைவாசிகளுக்கு 14 வகையான தொழில் சார்ந்த கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட புழல் சிறைச்சாலையிலே 4 சக்கர வாகனம் பழுதுபார்க்கின்ற பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுக்கு அழகு சாதன பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, First time offender என்று சொல்லக்கூடிய முதல் முறை குற்றம் சுமத்தப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தக்கூடிய வகையில் சிறை அமைத்து, ஏற்கெனவே habitual offender என்று சொல்லக்கூடிய கைதேர்ந்த குற்றவாளிகளுடன் கலவாமல் இருப்பதற்குத் தனியாக சிறைச்சாலைகள் அமைக்க அரசிடம் கருத்துரு ஏதேனும் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினாவிற்கும், உங்கள் வினாவிற்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**55—**

## புதிய கட்டடம்

***11742—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 ஏப்ரல் 9]

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் உள்ள மாவட்ட வன அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு திருப்பூர் மாவட்ட வன அலுவலகம், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட உடுமலைப்பேட்டை நகராட்சி, பாபுகான் வீதி, புல எண் 27–இல், 300 சதுர மீட்டர் (தோராயமாக) பரப்பளவு கொண்ட வன நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பகுதி II திட்டத்தின்கீழ், 2012–2013–ஆம் நிதியாண்டில், ரூபாய் 28 இலட்சம் செலவில் உடுமலைப்பேட்டை மாவட்ட வன அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடுமலைப்பேட்டையிலே வன அலுவலகம் கட்டுவதற்கு இடம் இருக்கிறது என்று கூறினார்கள். அந்த இடம் குறைவாக இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு திருப்பூர் மாவட்டத்திற்கும், உடுமலைப்பேட்டை கோட்டத்திற்கும் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான 13 ஏக்கர் 23 சென்ட் நிலம் உள்ளது. அனைத்து துறைகளினுடைய அலுவலகமும் கட்டக்கூடிய அந்த இடத்திலேயே வனத் துறையினுடைய அலுவலகமும் கட்டினால் பயனுள்ளதாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே துறை வாரியாக இடம் தேர்வு செய்யப்பட்டு, 2012–2013 ஆம் நிதியாண்டிலேயே நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதோடு ஒருங்கிணைந்த உடுமலை, அமராவதி வனச் சரகப் பகுதியிலே மலைவாழ் மக்கள் வசிக்கக்கூடிய 12 பகுதிகளிலே 749 வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களின் வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையிலே உள்ளன. உள்ளாட்சி அமைப்பின் மூலமாகச் செய்வதற்கு முடியாத சூழ்நிலையில் இருந்தாலும்கூட, வனத் துறையின்மூலமாக வேறு ஏதேனும் நிதியை ஒதுக்கீடு செய்து நடப்பாண்டிலேயே கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டில் வனத் துறையின் நிதிநிலைமையைப் பொறுத்து கட்டடம் கட்டுவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு*

2012 ஏப்ரல் 9]

*மாத ஊதியம் ரூ. 13 ஆயிரம் வழங்கி சம்பள ஒப்பந்தத்தை ஏற்படுத்தித் தர, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வினா மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. தனிக் கேள்வி போடவும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**56—**

**பகுதிநேர நியாய விலைக் கடை**

***2591—திரு. சு. குணசேகரன்:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்டம், எம். வேலாங்குளம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணையில் வகுக்கப்பட்டுள்ள புதிய பகுதிநேர அங்காடி அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், பிரிக்கப்பட்ட பின்பு தாய் கடையில் 500 குடும்ப அட்டைகளும் இருக்கவேண்டுமென்ற நிபந்தனை சிவகங்கை மாவட்டத்தில் உள்ள எம்.வேலாங்குளம் கிராமத்தில் பூர்த்தியாகாத காரணத்தினால் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத்*